# சென்னை மெட்ரோ ரெயில் 2-ம் கட்ட விரிவாக்கத்துக்கு ரூ.63 ஆயிரம் கோடி



புதுடெல்லி, பிப்.2-

சென்னை மெட்ரோ ரெயில் திட்டத்தில் 118 கி.மீ. தூரத்துக்கான 2-ம் கட்ட விரிவாக்கத்துக்கு ரூ.63 ஆயிரத்து 246 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று பட்ஜெட்டில் மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் அறிவித்தார். 2021-22-ம் ஆண்டுக்கான பட்ஜெட் உரையில் அவர் தெரிவித்ததாவது:-

'மெட்ரோ ரெயில் திட்டத்தை விரிவுபடுத்துவதன் மூலமும், நகர பஸ் சேவையை அதிகரிப்பதன் மூலமும் நகர்ப்புறங்களில் பொது போக்குவரத்தின் பங்கை கூட்டுவதற்கு அரசு முயற்சிக்கும். நகர்ப்புற பொது பஸ் போக்குவரத்து சேவையை அதிகரிக்க ரூ.18 ஆயிரம் கோடி செலவில் ஒரு புதிய திட்டம் தொடங்கப்படும்.

20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பஸ்கள் இயக்கத்துக்கு முதலீடு செய்வதற்கும், ஏற்பதற்கும், இயக்குவதற்கும், பராமரிப்பதற்கும் புதுமையான அரசு-தனியார் பங்கேற்பு மாதிரிகள் உருவாக்கப்படும். இந்த திட்டம், ஆட்டோமொபைல் துறைக்கு ஊக்கமாக அமைவதுடன், பொருளாதார வளர்ச்சிக்கு வழிகோலும், இளையோருக்கு வேலை வாய்ப்புகளை வழங்குவதுடன், நகர்ப்புற வாசிகளின் எளிதான போக்குவரத்துக்கும் உதவும். நாடு முழுவதும் மெட்ரோ ரெயில் சேவைகளும் துரித வேகத்தில் விரிவுபடுத்தப்பட்டு வருகின்றன.

தற்போது நாட்டில் மொத்தம் 702 கி.மீ. தூரத்துக்கு வழக்கமான மெட்ரோ ரெயில் சேவை இருக்கிறது. மேலும் 27 நகரங்களில் ஆயிரத்து 16 கி.மீ. தூரத்துக்கு மெட்ரோ சேவையும், துரித போக்குவரத்து அமைப்பும் ஏற்படுத்தப்படும்.

முதல்நிலை நகரங்களின் புறநகர் பகுதிகளிலும், இரண்டாம் நிலை நகரங்களிலும் மெட்ரோ ரெயில் அமைப்பின் அதே வசதி, பாதுகாப்புடன் 'மெட்ரோலைட்', 'மெட்ரோநியோ' என்ற புதிய தொழில்நுட்ப ரெயில் சேவைகள் தொடங்கப்படும்.

சென்னைமெட்ரோரெயில்திட்டத்தில் 118.9 கி.மீ. தூரத்துக்கான 2-ம் கட்ட விரிவாக்கப்பணிக்காக ரூ.63 ஆயிரத்து 246 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

கொச்சி, பெங்களூரு, நாக்பூர், நாசிக் மெட்ரோ ரெயில் விரிவாக்கப்பணிகளுக்கும் நிதி ஒதுக்கப்படும்.'

இவ்வாறு அவர் கூறினார்.